# மான்மின் செய்திகள்
# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com



## வல்லமையான ஜெபத்தினால் இர்மா புயல் மடிந்துப்போனது!

நிலநடுக்கம், புயல்கள், பஞ்சங்கள் மற்றும் வெள்ளம் போன்ற இயற்கை பேரழிவுகளினால் இந்த உலகம் பாதிக்கப்பட்டு கொண்டு வருகிறது. சமீபத்தில், 7.1 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் மெக்ஸிகோவை தாக்கி 300க்கும் மேற்பட்ட மக்களின் உயிரைப் பறித்தது. அந்த இடத்தில் மக்களை காப்பாற்றிக்கொண்டிருந்த ஒரு மனிதன், "இது சோதோம் கொமோரா போன்றுள்ளது, தேவன் நம்மீது கோபங்கொண்டிருக்கிறார்" என்று சொன்னான்.

எப்படியிருந்தாலும், தேவன் அன்பாகவே இருக்கிறார். ஒருவேளை பத்து நீதிமான்கள் சோதோம் கொமோராவில் இருந்திருந்தால் அதன்மீதான நியாயத்தீர்ப்பை திரும்பப் பெற்றிருப்பார். அவர் அன்பை பகிர்ந்துகொள்ளவே முதல் மனிதனாகிய ஆதாமை மிகுந்த அக்கறையோடு படைத்தார். அவர் பொல்லாத மனிதர்களின் அழிவை கண்டு களிகூருபவரல்ல, மாறாக அப்படிப்பட்டவர்கள் மனந்திரும்பி தம்மிடத்தில் வரும்படி நீடிய பொறுமையோடு அவர்களுக்காக காத்துக்கொண்டிருக்கிறார். இன்றும்கூட, அவர் வானிலை நிகழ்வுகளை கட்டுப்படுத்துகின்ற வல்லமையான கிரியைகளை காண்பித்து அதன் மூலமாக ஆத்துமாக்கள்மீது தம்முடைய ஆழமான அன்பை வெளிப்படுத்துகிறார்.


செப்டம்பர் 2017ன் ஆரம்பத்தில், தேவனுடைய அன்பும் வல்லமையும் மிகத் தெளிவாக மீண்டும் வெளிப்பட்டது. இர்மா புயல் அமெரிக்க தேசத்திற்கு மிகுந்த பதட்டத்தை ஏற்படுத்தியது. ஆகஸ்டு மாதத்தின் இறுதியில்தான் ஹார்வி புயல் டெக்சாஸ் மற்றும் லூசியானா நகரங்களை கடுமையாக தாக்கியது குறிப்பிடத்தக்கது. இர்மா புயலைக்காட்டிலும் குறைந்த தாக்கமுடையதாக இருந்த போதிலும், ஹார்வி புயல் 60க்கும் மேற்பட்ட உறுதியாக்கப்பட்ட மரணங்களையும், ஏறக்குறைய 180 மில்லியன் டாலர் அளவிற்கு பொருளாதார சேதங்களையும் ஏற்படுத்தியது. இந்த ஹார்வி புயலின் அதிர்ச்சி அமெரிக்க அரசாங்கத்தையும் மக்களையும் வாழ்வின் நுனிக்கு கொண்டு சென்றது.

அட்லாண்டிக் புயல்களிலேயே கடுமையான புயலாக பதிவாகிய இர்மா புயல் வந்தபொழுது மான்மின் மிஷனரிகள் மற்றும் விசுவாசிகள் அறிவர். ஜேராக் லீ அவர்களிடம் ஜெபவிண்ணப்பத்தை அனுப்பி வைத்தனர்: அறிவர். மிக்ஹாய்ல் மொர்குலிஸ், ஸ்பிரிச்சுவல் டிப்ளோமாசியின் தலைவர்; போதகர் மார்க் ஃபாசல்வ், உலக பரிசுத்த மையம்; போதகர் விட்டாலி ஃபிஷ்பெர்க், தேவனுடைய வல்லமை ஞானம் மான்மின் சபை; நியூயார்க்கில் வசிக்கும் ரஷ்ய மொழி பேசும் மக்களுக்கான மிகப் பெரிய சபையின் போதகர் கென்னடி சவாலி; மற்றும் அமெரிக்காவில் உள்ள அநேக ரஷ்ய அமெரிக்க போதகர்கள்.

அறிவர். ஜேராக் லீ அவர்கள் செப்டம்பர் 8 அன்று காலை 6.45 மணிக்கு அதற்காக ஜெபித்தார். அவருடைய ஜெபத்திற்குப் பின்னர், அது அமெரிக்காவின் கிழக்கு கடற்கரையில் வடபுறம் நோக்கி நகரும் என வானிலை அறிக்கையில் சொல்லப்பட்டதற்கு மாறாக, கிழக்கு புளோரிடாவில் 4ம் எண் புயலாக இருந்த இர்மா புயலின் திசையானது மேற்கு நோக்கி நகர்ந்தது, பிறகு வடக்கு மற்றும் உள்நாட்டு பகுதிகளை நோக்கி நகர்ந்துச் சென்றது. மேலும் அது 3, 2, மற்றும் 1ம் எண் புயலாக வலுவிழந்து, செப்டம்பர் 12ல் ஒரு சாதாரண வெப்பமண்டல புயலாக மடிந்தது (படம் 2).


கூடுதலாக, அதன் திசை மேற்குப் பகுதிகளை நோக்கி அதிகம் நகர்ந்தது, அந்தப் பகுதியில் தேசிய பூங்கா மற்றும் மிகக் குறைந்த மக்கள் வாழ்கின்ற ஈரப்பத நிலங்களே உள்ளன. அங்கு கிழக்குப் பகுதியில் உள்ளபடி அதிக மக்கள்தொகை கொண்ட பட்டணங்கள் எதுவுமில்லை. அதனால் அங்கு அவ்வளவு பெரிய அழிவுகள் ஏற்படவில்லை. அறிவர். லீ அவர்கள் ஜெபித்தபடி, அமெரிக்கா ஒரு கடுமையான பேரழிவை தவிர்த்துள்ளது. அறிவர். லீ அவர்களின் ஜெபத்தின் மூலமாக தேவனுடைய பாதுகாப்பின் கீழிருந்த போதகர்களும் விசுவாசிகளும் திருச்சபைக்கு தங்களது நன்றியின் கடிதங்களை அனுப்பி கொண்டிருக்கின்றனர் (இதைப் பற்றிய கூடுதலான செய்திகள் 4ம் பக்கத்தில்).

**படம் 1 ஜெபத்திற்கு முன்பு செப்டம்பர் 7 அன்று காலை 5 மணிக்கு**




கரிபீயன் தீவுகள் வழியாக இர்மா கடந்துச் சென்று, புளோரிடாவின் கிழக்கு கடற்கரையிலிருந்து ஒரே நேர்கோட்டில் வடக்குநோக்கிச் செல்லும் என்று வானிலையில் அறிவிக்கப்பட்டது.

**படம் 2 ஜெபத்திற்கு பின்பு செப்டம்பர் 10 அன்று மாலை 5 மணிக்கு**




இர்மா எதிர்பாராதவிதமாக அதிகமாக மேற்கு நோக்கி நகர்ந்து, உள்நாட்டிற்குள் செல்லும்போதே வலுவிழந்து முடிவாக மடிந்துப்போனது.


## விசுவாசத்திற்கு அஸ்திபாரம் இடும் அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஆறு புத்தகங்கள்!

**பத்து வாதைகள்**

### கீழ்ப்படிதலின் வாழ்க்கையும் கீழ்ப்படியாமையின் வாழ்க்கையும்

8 மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது




பத்து வாதைகளை விளக்குவதின் மூலம் இந்தப் புத்தகம், நம் அநுதின வாழ்க்கையில் வரும் பேரழிவுகளுக்கான ஆவிக்குரிய காரணத்தை விளக்குகிறது. தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதால் வரும் ஆசீர்வாத பாதைக்கு நேராக நம்மை வழிநடத்துகிறது.

**விசுவாசம்**

### நம்பப்படுகிறவைகளின் உறுதியே விசுவாசம்

4 மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது




விசுவாசம் என்றால் என்ன, பூரண விசுவாசத்தைப் பெறுவது எப்படி, விசுவாச முற்பிதாக்களால் எப்படிப்பட்ட கிரியைகள் நிகழ்த்தப்பட்டன என்ப-தையும், உண்மையான விசுவாச கிரியைகள் எப்படிப்பட்ட கனிகளை கொண்டிருக்கும் என்பதையும் வாசகர்-களுக்கு விளக்கும் இந்தப் புத்தகம் ஒரு உண்மையான விசுவாசத்தை பெறுவதற்கான பாதையாகும்.

**பதில்கள்**

### என் பிதா என் நாமத்தினாலே உங்களுக்கு அருளுவார்

4 மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது




தேவனுடைய ஏழு ஆவிகள், விதைப்பது அறுப்பதின்மூலம் வரும் ஆசீர்வாதத்தின் இரகசியங்கள் மற்றும் நம் ஜெபங்களுக்கு பதில்களைப் பெறாததற்கான காரணங்-களைப் பற்றி தெளிவாக விளக்குகின்ற இந்தப் புத்தகம், பதில்களைப் பெறுவதற்கான ஆவிக்குரிய கோட்பாடுகளை விவரிக்கிறது.

**ஜெபம்**

### விழித்திருந்து ஜெபம்பண்ணு

10 மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது




இந்தப் புத்தகமானது உகந்த ஜெபத்திற்கான இருதயம் மற்றும் நடத்தையை குறித்த கருத்துக்களை வாசகர்களுக்கு தெரிவிக்கிறது. இதன்மூலம் வாசகர்கள் ஒவ்வொருவரும் பதில்களையும் ஆசீர்வாதங்களையும் கீழே கொண்டு வருகிற ஊக்கமான ஜெபத்தை தேவனிடத்தில் ஏறெடுக்க முடியும்.

**பத்துக் கட்டளைகள்**

### தேவனுடைய நியாயப்பிரமாணம்

7 மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது




இந்தப் புத்தகம் தேவன் ஏன் பத்துக் கட்டளைகளை கொடுத்தார், பத்துக் கட்டளைகளில் உள்ள ஆவிக்குரிய அர்த்தங்கள் என்ன மற்றும் பத்துக் கட்டளைகளை கைக்கொள்பவர்களுக்கு அருளப்படும் தேவனுடைய ஆசீர்வா–தங்களை நமக்கு விளக்குகிறது.

**ஆவிக்குரிய ஆராதனை**

### ஆவியோடும் உண்மையோடும் ஆராதித்தல்

5 மொழிகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது




பழைய ஏற்பாட்டின் லேவியராகமத்தில் உள்ள பலிகளைப் பற்றிய சட்டங்கள் வெளிப்புற சடங்காச்சார காணிக்கைகளை மட்டும் முக்கியப்படுத்தவில்லை. அதில் ஆழமான ஆவிக்குரிய அர்த்–தங்கள் உள்ளன. இது தேவனைப் பிரியப்படுத்தும் ஆவிக்குரிய ஆராதனையை ஏறெடுக்க நமக்கு உதவுகின்ற ஒரு உண்மையான மைல்கல்லாகும்.



தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ

# ஆண்டவரால் அருளப்படும் மெய் சமாதானம்

“சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக” (யோவான் 14:27).

இன்றைக்கு எண்ணற்ற மக்கள் பல இடங்களில் யுத்தங்களும் பேரழிவுகளும் இருப்பதால் கவலைகளோடும் பயத்தோடும் வாழ்கின்றனர். அவர்கள் தங்களுக்கோ அல்லது தங்கள் குடும்பம் மற்றும் நண்பர்களுக்கு வியாதிகள் அல்லது மரணம் போன்ற சில பிரச்சனைகள் வரும் என பயந்து தங்களை தாங்களே எதிர்கால விபத்துகளுக்காக ஆயத்தப்படுத்திக் கொள்கின்றனர். இப்பேர்பட்ட நேரங்களில் நாம் எப்படி மெய் சமாதானத்தை அனுபவிக்க முடியும்? என்று இப்போது நாம் பார்ப்போம்.

## 1. சமாதானம் என்பது உலகம் தருவதல்ல, அது தேவன் உங்களுக்குத் தருவதாகும்.

அகராதி, “சமாதானத்தை” தொந்தரவு செய்யப்படாத, அமைதியான, நிசப்தமான சூழலில் இருத்தல்” என்று வரையறுக்கிறது. அநேக மக்கள் சமாதானத்தை வேண்டுகிறார்கள். ஆனால் அதைக் கொண்டிருப்பது எளிமையானது அல்ல. அவர்கள் சமாதானத்தைப் பெறுவதற்கு ஐசுவரியமுள்ளவர்களாக அல்லது புகழையும் அதிகாரத்தையும் அதிகரிக்க முயற்சிக்கிறார்கள். ஆனால் அவர்கள் பேரழிவுகள், சோதனைகள் அல்லது வியாதிகளுக்குட்படுவது என்பது மனித ஆற்றலுக்கு அப்பால் உள்ளது என்று முடிவில் அறிந்துணர்வார்கள். அவர்கள் உடை, உணவு மற்றும் உறைவிடத்தைக் குறித்து கவலையில்லாமல் ஒருவேளை இப்போது சமாதானத்தோடு இருந்தாலும் கூட, அடுத்து என்ன நடக்குமோ என்று அறியாமல் எதிர்காலத்தைக் குறித்து கவலையோடு இருக்கிறார்கள். அவர்கள் கவலைகளோடும் விசாரத்தோடும் வாழ்கிறார்கள்.

மெய் சமாதானம் பரத்திலிருந்து வரும். தேவன் அதை உங்களுக்குத் தந்தால் மட்டுமே நீங்கள் அதைப் பெறமுடியும். அது சாதாரணமாக யாருக்கும் கொடுக்கப்படாது. மேலும் அதை உலகத்தால் தரவும் முடியாது. புகழ், அதிகாரம் அல்லது பரந்த சொத்துக்கள் உங்களுக்கு சமாதானத்தை கொண்டு வராது. ஆனால் தேவனில் வாசம் செய்யும் விசுவாசிகளாக இருப்பவர்கள், அமைதியாக, சமாதானமாக இருக்க முடியும். வாழ்க்கை எத்தனை கடினமானாலும் தாயின் கரங்களில் உள்ள குழந்தையை போல சந்தோஷமாக இருக்க முடியும்.

அன்பின் தேவன் தம்முடைய பிள்ளைகள் அனைவருக்கும் சமாதானத்தை தருவதற்காக இந்த உலகத்திற்கு நம் இரட்சகர் இயேசுவை அனுப்பினார். ஆக யாரானாலும் அவர்கள் ஆண்டவரை விசுவாசித்து பாவம் அநியாயங்களிலிருந்து விலகினால், தேவனால் அருளப்படும் இச் சமாதானத்தை பெறலாம். சிலுவையின் அன்பின் மூலமாக ஆண்டவர் இரட்சிப்பின் அநாதி திட்டத்தை நிறைவேற்றி முடித்தார். விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்ட மக்கள் சமாதானத்தைப் பெற்று நித்திய காரியங்களை எந்தளவாய் தேடுகிறார்களோ அந்தளவாய் நன்றிகளை ஏறெடுக்கின்றனர்.

## 2. நித்திய காரியங்களை தேடுங்கள், அதாவது, சத்தியத்தை தேடுங்கள், அப்போது பரத்திலிருந்து சமாதானம் உங்கள் மேல் வரும்.

சங்கீதம் 119:165ல் வாசிக்கிறோம், “உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு, அவர்களுக்கு இடறலில்லை.”

நீங்கள் சத்தியமாயிருக்கிற தேவனுடைய பிரமாணங்களை நேசித்தால், நீங்கள் சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் சமாதானத்தையும் கொண்டிருக்க முடியும். உலகத்தில் ஒன்றும் அவைகளை எடுக்க முடியாது. நீங்கள் பிரச்சனைகளை சந்தித்தாலும்கூட, உங்களால் ஸ்தோத்திரம் செலுத்தவும், களிகூரவும், ஜெபிக்கவும் முடியும். அப்போது பிரச்சனைகள் தீர்ந்து ஆசீர்வாதங்கள் உங்கள்மேல் வரும். தேவன் உங்கள் பிரச்சனைகளைத் தீர்ப்பவராக இருப்பதால், நீங்கள் தேவன் உங்கள்மேல் பாதுகாப்பாய் இருக்கிறார் என்று விசுவாசித்து, நீதிமொழிகள் 1:33, “எனக்குச் செவிகொடுக்கிறவன் எவனோ, அவன் விக்கினமின்றி வாசம்பண்ணி, ஆபத்திற்குப் பயப்படாமல் அமைதியாயிருப்பான்” என்று சொல்வதுபோல அழிவுகளை குறித்து எந்தப் பயமும் இல்லாதிருப்பீர்கள்.

இருப்பினும், உங்களில் வெறுப்பு, வாக்குவாதம், பொறாமை, ஆணவம், கோபம், பெருமை, பணம் மற்றும் புகழுக்கான பேராசையிருந்தால், நான் ஆண்டவரை விசுவாசிக்கிறேன் என்று சொல்லி ஆலயத்தில் ஊக்கமாக பங்குப்பெற்றாலும், உங்கள் இருதயத்தில் கலக்கத்தை உணராமல் இருக்க முடியாது. யாராகிலும் உங்களுக்கு நேரே சிறுமைப்படுத்துகிற வார்த்தைகளை சொன்னால், அது உங்கள் பெருமையை காயப்படுத்தும்; நீங்கள் உங்களில் கோபப்படுவீர்கள் அல்லது உங்களில் உள்ள வெறுப்பு கிளர்ச்சியடையும். உங்களுக்கு இல்லாத ஒன்றை உங்கள் சக பணியாளர் அனுபவிப்பதை நீங்கள் கண்டால் நீங்கள் போட்டி மனப்பான்மையால் அசௌகரியத்தை உணருவீர்கள். வேறு வார்த்தையில், உங்கள் இருதயத்தில் எந்தளவாய் சத்தியத்திற்கு புறம்பான காரியங்கள் இருக்கிறதோ அந்தளவாய் உங்களால் சமாதானத்தோடு இருக்க முடியாது. நீங்கள் மாம்சத்திற்குரிய வஸ்துக்களை உங்கள் இருதயத்திலிருந்து களைந்துப்போட்டு உங்கள் இருதயத்தை சத்தியத்தால் நிரப்பும்போதுதான் சமாதானம் உங்கள்மேல் வரத் துவங்கும்.

உங்களில் போட்டி பொறாமை இல்லாதபோது, உங்கள் இருதயம் அமர்ந்த தண்ணீர் போல சமாதானத்தோடிருக்கும். நீங்கள் மனமுடைந்தோ அல்லது கலக்கத்தையோ உணரமாட்டீர்கள். நீங்கள் ஏழையாக இருந்தாலும், நீங்கள் உங்கள் அயலகத்தார் பெற்ற மிகப் பெரிய ஆசீர்வாதத்தோடு மகிழ்ச்சியோடும் சந்தோஷத்தோடும் இருக்க முடியும். உங்களில் பெருமை அல்லது கோபம் இல்லை எனில், யாராகிலும் உங்கள் உணர்வுகளை காயப்படுத்துகிறதுபோல அல்லது உங்களை சுட்டி காண்பிக்கும் வகையில் ஏதாகிலும் சொன்னாலும்கூட, நீங்கள் அசௌகரியமாக உணரமாட்டீர்கள். எந்த ஒரு காரணமும் இல்லாமல் யாராகிலும் உங்களை விமர்சித்தாலும்கூட, நீங்கள் உங்களை ஆராய்ந்து பார்த்து அவரைப் பார்த்து புன்னகைக்க முடியும்.

நீங்கள் பரிபூரணமாக பரிசுத்தமாகாவிட்டாலும், ஊக்கமாக ஒன்றன்பின் ஒன்றாக சத்தியத்திற்குப் புறம்பான காரியங்களை களைந்துப்போட்டால் தேவனால் சந்தோஷம் உங்களுக்கு அருளப்படும். பரலோகத்தின் நம்பிக்கையினால் உங்கள் இருதயம் நிரப்பப்படும், உங்கள் முகம் ஆவிக்குரிய வெளிச்சத்தால் பிரகாசமாகும். எந்தளவாய் உங்கள் இருதயத்தின் ஆழத்தில் உள்ள பாவங்களையும் தீமைகளையும் களைந்துப்போட்டு, சத்தியத்தால் அதை இடமாற்றுச் செய்கிறோமோ அந்தளவாய் நீங்கள் மெய்யான ஆறுதலையும் சமாதானத்தையும் உணருவீர்கள்.

சுருக்கமாக, நாம் நித்திய காரியங்களை நாடி எல்லாக் காரியங்களிலும் பிறருடைய ஆதாயத்தை தேடும்பொழுது, தேவன் நம்முடைய இருதயங்களை பரலோக சந்தோஷத்தாலும் சமாதானத்தாலும் நிரப்புவார்.

## 3. தேவனுடைய அன்பை சார்ந்துக்கொள்ளுங்கள், நீங்கள் ஒருபோதும் சமாதானத்தை இழக்க மாட்டீர்கள்.

உண்மையான விசுவாசத்தோடு இருப்பவர்கள் உலக காரியங்களிலிருந்து இன்பங்களை எடுப்பதில்லை. அவன் தன் கண்களையும், செவிகளையும் வாயையும் திருப்தி செய்ய முயற்சிப்பதில்லை. அவன் பாவங்களுக்கு விரோதமாக ஊக்கமாக போராடி அவைகளை களைந்துப்போட கடுமையாக முயற்சிப்பான். அவன் தேவனை உண்மையாய் நேசிக்கிறபடியால், அவருடைய மெய்யான பிள்ளையாய் மாறி தேவனைப் பிரியப்படுத்த விரும்புவதே இதன் காரணம். நாம் எந்தளவாய் தேவனை நேசித்து அவருக்கு முன்பாக ஆவிக்குரிய ரீதியில் நம்மை அலங்கரிக்கிறோமோ அந்தளவாய், தேவன் நிச்சயமாக நமக்கு அதிகமான ஆறுதலையும் சமாதானத்தையும் நம் சரீரத்திலும் ஆவியிலும் தருவார். தேவன் ஆண்டவருடைய மண்டலத்தில் எல்லா வகையான பேரழிவுகளிலிருந்து நம்மை பாதுகாப்பார். “அமுக்கி குலுக்கி மடியில் சரிந்துவிழும்” வண்ணமாக நம்மை நல்ல அளவில் ஆசீர்வதிப்பார்.

ஒரு கிறிஸ்தவ வாழ்வு என்பது எப்போதும் உங்கள் முன்னே எளிமையான வழியாக இருப்பதில்லை. தேவன் சில சமயங்களில் உங்களுக்கு பாடுகளை அனுமதிக்கிறார். அதன் மூலமாக நாம் அழகான மனிதர்களாய் மாறுவதற்கு நீங்கள் தப்பிச் செல்ல வழியில்லாத கஷ்டத்தில் மாட்டியிருக்கலாம் அல்லது உங்களது சகிப்புத் தன்மைக்கும் அப்பாலே உபத்திரவப்படுத்தப்படலாம் அல்லது சத்துருக்களால் சூழப்பட்டிருக்கலாம். அந்த சூழ்நிலை நீங்கள் ஒவ்வொரு ஆராதனையிலும் ஜெபங்களிலும் ஊக்கமாக பங்குப்பெற உங்கள் சிறப்பை முயற்சிக்கையில் பார்ப்பதற்கு மோசமாக காணப்படலாம். இப்பேர்பட்ட சூழ்நிலையிலும்கூட தேவனை சார்ந்துக்கொள்வதற்கு உங்களுக்கு விசுவாசம் இருந்தால், நீங்கள் சமாதானத்தை இழந்துபோக மாட்டீர்கள்.

நீங்கள் பயப்படமாட்டீர்கள், சோர்ந்துபோக மாட்டீர்கள், மனமுடைந்துப் போகமாட்டீர்கள். நீங்கள் கஷ்டமான நிஜங்களை விசுவாசத்தோடு மேற்கொண்டு மகிழ்ச்சியோடு இருதயத்திலிருந்து நன்றி செலுத்துவீர்கள். உலக மக்களைப் போல அல்லது எல்லா கஷ்டங்களுக்கும் முடிவு உண்டு என்று நீங்கள் நம்புவீர்கள். அவைகள் ஆசீர்வாதங்களாக மாறும். இதன் காரணம் நீங்கள் தேவனுடைய அன்பை விசுவாசிக்கிறீர்கள்.

ரோமர் 8:32 சொல்கிறது, “தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?” யோபு 23:10ல் வாசிக்கிறோம், “ஆனாலும் நான் போகும் வழியை அவர் அறிவார்; அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்.” உங்களுக்கு தம்முடைய ஒரே பேறான குமாரனை தந்து உங்கள் எல்லா ஜெபங்களுக்கும் பதிலளிக்க விரும்புகிற அளவு உங்களை அதிகமாய் நேசிக்கிற தேவனுடைய அன்பில் உங்களுக்கு நிச்சயமிருந்தால், அவருடைய பிரசன்னம் உங்களோடு உள்ளது என நீங்கள் தைரியங்கொள்வீர்கள். தற்காலிகமாக பாடுகளால் சோர்பை நீங்கள் உணரலாம் அல்லது உங்கள் இருதயத்தை உடைக்கிற ஏதோ ஒன்றை பார்க்கும்போது துக்கத்தின் கண்ணீரை சிந்தலாம். ஆனாலும் உங்கள் இருதயத்தின் ஆழத்தில் சமாதானம் ஒருபோதும் உங்களை விட்டு விலகாது. பாடுகள் எவ்வளவு பெரிதாக உள்ளதோ அவ்வளவு பெரிதாய் விசுவாசத்தில் நன்றியையும் மகிழ்ச்சியையும் நீங்கள் உணருவீர்கள்.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, உங்களுக்கு பாடுகளின் மத்தியிலும்கூட மெய்யான சமாதானம், சந்தோஷம் மற்றும் பரலோக நம்பிக்கையளிக்கிற தேவனுடைய அன்பை நீங்கள் உணருவீர்கள் என நான் நம்புகிறேன். தேவனுடைய அன்பினாலே பெலப்பட்டு நீங்கள் பரிசுத்தமாகி, ஜெபத்திலே எவைகளை கேட்கிறீர்களோ அவைகளைப் பெற்று தேவனை மகிமைப்படுத்தும்படி ஆண்டவருடைய நாமத்தில் ஜெபிக்கிறேன்.

**விசுவாசத்தின் அறிக்கை**

**1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.**
**2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்**
**3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.**
**4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.**
**5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை “அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்” மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.**

“எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]…” [அப். 17:25]
“அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” [அப். 4:12]

# யோசேப்பு, தேவனுடைய உடன்படிக்கையின் வாய்க்கால்

## இளைஞர் வேதபாட புத்தகம் - 9

திருச்சபையின் 35வது ஆண்டுவிழா கொண்டாட்டத்தை முன்னிட்டு, அறிவர். ஜேராக் லீ அவர்களது 110வது புத்தகம் மற்றும் இளைஞர்களுக்கான 9வது புத்தகம், *யோசேப்பு தேவனுடைய உடன்படிக்கையின் வாய்க்கால்* வெளியீடப்பட்டது.

எகிப்துக்கு அடிமையாக விற்கப்பட்ட 17 வயது எபிரெய பையன் தேவனுடைய நல்ல சித்தத்தில் விசுவாசம் வைத்து, அவன் தேவனுடைய உடன்படிக்கைக்கு வாய்க்காலானான். அவனுடைய வாழ்வின் பதிவு வாசகர்கள் தேவனுடைய அன்பையும் அவர்களுக்கான தரிசனத்தை கண்டறியவும் மெய்யான தலைமைத்துவத்தை கற்கவும் வழிநடத்தும்.

இந்தப் புத்தகம் 14 அதிகாரங்கள் கொண்டுள்ளது, அவைகள் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பகுதி 1, எபிரெய பையன் எகிப்தின் இரண்டாம் ஆளுர் ஆனான்; பகுதி 2, யோசேப்பின் ஞானம் ஜனங்களை இரட்சித்தது; பகுதி 3, தேவனுடைய உடன்படிக்கைக்கு வாய்க்கால். இப்புத்தகம் ஆவியின் இருதயத்தோடு யாக்கோபின் நற்குணம் பூரண ஆவியின் இருதயத்தோடு யோசேப்பின் நற்குணம் ஆகியவற்றிற்கிடையில் ஒப்பிட்டு வேத அறிவை வழங்கும் விசேஷித்த பகுதிகளை கொண்டுள்ளது.

யோசேப்பின் வாழ்வை படிப்படியாக நீங்கள் பின்பற்றுகையில், நீங்கள் மனிதர்களை விட உயரமான பெரிதான தேவனுடைய திட்டத்தை கண்டறிவீர்கள். அன்பின் தேவன் எப்போதும் உங்களுக்கு நல்ல காரியங்களை மட்டுமே கொடுக்க விரும்புகிறார் என்பதையும் கண்டறிவீர்கள். இது நீங்கள் ஆவியில் வளர உதவும்.



## “எனது இருதயம் ஒரே நாள் இரவில் இயல்பாகவும் ஏன் வலிமை மிகுந்ததாகவுமாயிற்று”

**கண்காணி ராபர்ட் ஜான்சன், வயது 70, அமெரிக்கா**



ஜூன் 24, 2017 அன்று மதியம் என் மனைவி பயணர் இருக்கையில் அமர்ந்திருக்க நான் வாகனம் ஓட்டிக் கொண டிருந்தேன். திடீரென்று, நெஞ்சில் அழுத்தத்தை உணர்ந்தேன். அது என் நெஞ்சின் மையத்தை அழுத்தியது. எனது கழுத்து மற்றும் என்னுடைய முகத்தின் இடது பக்கம் மதமதத்துப்போனது. எனது நெஞ்சிலிருந்து அசௌகரியம் எனது கையின்மேல் பகுதிக்குப் பரவியது.

எனது மனைவி அருகாமையிலிருந்த இராணுவ தீவிர சிகிச்சை உதவி மையத்திற்கு ஓட்டிச் சென்றாள். எனது திறன்பேசியில் தலைமை போதகருடைய வியாதியஸ்தர்களுக்கான ஜெபத்தைப் பெற்றேன். எனக்கு மாரடைப்பு சாத்தியக்கூறு உள்ளது என்று கண்டறியப்பட்டு அருகில் உள்ள இருதய ஆஸ்பத்திரிக்கு நகர்த்தப்பட்டேன். அன்று இரவு, என் மனைவி பிரதான ஆலயத்திற்கு இதை தெரிவித்து, மலை ஜெபவீட்டில் ஜெபித்துக் கொண்டிருக்கும் அறிவர். ஜேராக் லீ அவர்களுக்கு ஜெப விண்ணப்பத்தை அனுப்பினாள். அவர் எனக்காக ஜெபித்தார்.

ஜூன் 25 அன்று, நான் மீண்டும் இரத்தப் பரிசோதனை மற்றும் முழுமையான மருத்துவ பரிசோதனையின்கீழ் சென்றேன். அடுத்தநாள், முடிவுகள் வெளியாயின. ஒரு அற்புதம் நடந்தது; இருதய சிகிச்சை நிபுணர் என்னிடம் உங்கள் இருதயம் இயல்பாக உள்ளது, ஏன் வலுமையாகவும் சுத்தமாகவும் இருக்கிறது என்றும் சொன்னார். ஆச்சரியமாக, அவர் கூடுதலாக எனது இருதயம் பின் நாற்பது அல்லது முன் ஐம்பது வயதுள்ளவர்களின் இருதயம் போல் உள்ளது என்றார். தலைமை போதகருடைய ஆகாயத்தையும் காலத்தையும் கடக்கும் ஜெபத்தால் எனது இருதயமும் இயல்பாகவும் வலுவாகவும் மாறியது! ஹலேலூயா!

## “நான் திறன்பேசி விளையாட்டுகளை வெறுக்கலானேன்!”

**சகோதரர் யோங்வாங் க்வோன், வயது 12, 5ம் வகுப்பு, மான்மின் மத்திய திருச்சபை**

நான் திறன்பேசி பெற்றவுடன் ஒவ்வொரு காலையும் திறன்பேசி விளையாட்டுடன் என் நாளை துவங்கினேன். நான் என் வீட்டிற்கு நண்பர்களை அழைத்து அவர்களுடன் சேர்ந்து விளையாட்டு விளையாடினேன். எனக்கு விளையாட்டுகள் ரொம்ப பிடித்திருந்தது. அவைகளை விளையாடுவதை என்னால் நிறுத்த முடியவில்லை. நான் ஆகஸ்டு 2017ல் நடைபெற்ற மான்மின் கோடை முகாமில் பங்குப்பெற்றேன். முதல் நாள் இரவிலே, தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களது ஜெபத்தின்மூலமாக, மனநிலை கோளாறு இருந்த ஜனங்களி லிருந்து பேய்கள் வெளிவருவதை கண்டேன். நான் அதிர்ச்சிய டைந்தேன். நான் எதிராளியாகிய பிசாசும் சாத்தானும் மனிதர்களை கட்டுப்படுத்தி அவர்களை பாவஞ்செய்ய வைக்கிறான் என்பதை அறிந்துணர்ந்தேன். திடீரென்று நான் விளையாட்டுகளை விளையாட விரும்பவில்லை. எனது திறன்பேசியிலிருந்து விளையாட்டுகள் அனைத் தையும் அந்த இடத்திலேயே அழித்துவிட்டேன்.



பிற்பாடு, நான் அனுதாப நரம்புக் கோளாறிலிருந்து சுகம்பெற்றேன். எனது கைகளும் கால்களும் எப்போதும் சூடாகவே இருக்கும். சில நேரம் என்னால் பென்சில்கூட பிடிக்க முடியாது. நான் குளிர்காலத்தின் நடுவிலும்கூட குளிர்படுக்கை விரித்து, உள்ளாடை மட்டும் தரித்து உறங்குவேன். என்னால் கால்உறைகளை போட்டுக் கொள்ள இயலாது. வெயில்காலத்தில் எனக்கு ஐஸ்கட்டி பைகள் தேவைப்படும். இருப்பினும், நான் திறன்பேசி விளையாட்டுகளை விளையாடுவதை நிறுத்தியவுடன், என் சரீரத்திலிருந்த சூடு அனைத்தும் வெளியேறியது. முழு உலகமே சமாதானமாயிருந்தது போல உணர்ந்தேன். நான் தேவனை மகிமைப்படுத்தும் பியானிஸ்டாக மாற கனா இருக்கிறது. என்னை சுகமாக்கிய தேவனுக்கு நான் நன்றி செலுத்துகிறேன்.



## “எனது கருமுட்டை குழாய் அடைக்கப்பட்டிருந்தது, ஆனாலும் தேவன் எனக்கு பிள்ளையைக் கொடுத்தார்”

**கண்காணி, யூனா பார்க், 45, மாகாணம் 31, மான்மின் மத்திய திருச்சபை**

ஏப்ரல் 2014ல், நான் வயது சென்று திருமணம் செய்தேன். ஆனால் எனக்கு ஒரு பிரச்சனை இருந்தது; நான் குழந்தை பெற விரும்பினேன். ஆனால் என்னால் முடியவில்லை. மே 2015ல், எனது கருமுட்டை குழாயினுள் சாயம் செலுத்தப்பட்டு, இரண்டு கருமுட்டை குழாய்களும் அடைக்கப்பட்டிருப்பதாக அந்த பரிசோதனைக் காட்டியது. நான் பிரபல்யமான கிழக்கத்திய மருத்துவ மருந்தகத்திற்குச் சென்று கிழக்கத்திய மருந்துகள் எடுத்தேன். ஆனாலும் ஒரு வித்தியாசமும் இல்லை. அதே வருடம் டிசம்பர் மாதத்தில் நானும் எனது கணவரும் அறிவர். ஜேராக் லீ அவர்களது ஜெபத்தைப் பெற்றுக்கொண்டோம். ஆனாலும் பார்ப்பதற்கு நான் அச்சமயம் குழந்தையை கருத்தரிக்காததால், அதன்பின் சீக்கிரமாக நான் வேறு முறைகளுக்குத் திரும்பினேன்.

2016 பிற்பகுதியில், நான் ஒரு பெரிய மருத்துவமனையில் லாபரோஸ்சோபிக் அறுவை சிகிச்சை நிபுணரிடம் சென்று, கருப்பை இயக்கத்தைப் பரிசோதித்தேன். கருப்பை செயலியக்கம் இல்லை என்று கண்டறியப்பட்டேன், அது பார்ப்பதற்கு எல்லாம் இயல்பாக தெரிந்தாலும் இயற்கை கருத்தரிப்பை 10 சதவீதம் கீழாக சாத்தியக் கூறாக்கியது. எல்லாவற்றையும் விட்டுவிடும் நிலைக்கு வந்தேன். எனது மாமனார் மாமியாருக்காக வருந்தினேன். அப்போதிருந்து இறுதியாக நான் கர்ப்பம் திறக்கும்படியாக ஜெபிக்கத் துவங்கினேன்.

மே 2017 துவக்கத்தில், எனது கணவரும் நானும் கருத்தரிப்பு ஆசீர்வாதத்தை எதிர்நோக்கி உபவாசத்துடன் குடும்ப ஆராதனை ஏறெடுத்து வந்தோம். நான் பரிபூரணமாக மனந்திரும்பும்படியான கிருபை அருளப்பட்டேன்; நன்றியோடு அதிக கண்ணீர் வடித்தேன். நான் நீண்ட காலமாக கிறிஸ்த வாழ்வு வாழ்ந்தாலும், அவருடைய வல்லமையான கிரியைகளை கண்டும் கேட்டும் இருந்தாலும், அதை அனுபவித்திருந்தாலும் கூட அறிவர். லீ அவர்களது வல்லமையான ஜெபத்தை நம்பாதிருந்ததிலிருந்து மனம் திரும்பினேன்.

ஒரு மாதத்திற்கு பிற்பாடு, எனது மாதவிடாய் சமீபமாயிருந்தது. ஆனால் அது துவங்கவில்லை. நான் கருத்தரிப்பு பரிசோதனை செய்தேன். அது பாஸிட்டிவாக இருந்தது! நான் முடிவில்லாமல் நன்றியின் கண்ணீர் வடித்தேன். இந்தத் திருச்சபையில் என் விசுவாச வாழ்வை நடத்துவதற்காக மிகவும் நன்றியுள்ளவளாய் உணர்ந்தேன். ஜூன் 15 அன்று, மகப்பேறு மற்றும் மயக்கவியல் மருத்துவமனையில் அது உறுதிசெய்யப்பட்டது. மருத்துவர், “நீங்கள் ஆறுவார கர்ப்பமாய் உள்ளீர்கள். அது உங்கள் கருப்பையில் உள்ளது. மஞ்சள்கரு சங்கு உள்ளது, நீங்கள் இதய துடிப்பைக் கேட்கலாம்” என்று சொன்னார். தேவனளித்த வெகுமதிக்காக நானும் எனது கணவரும் சந்தோஷமாயிருக்கிறோம். ஆவியிலும் சரீரத்திலும் எங்களை ஆசீர்வதித்த தேவனுக்கு எல்லா நன்றியையும் மகிமையையும் செலுத்துகிறேன்.

# அவருடைய வல்லமை புயலிலிருந்து ஜனங்களைப் பாதுகாத்தது



## "அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஜெபத்தினால் ஒரு அற்புதம் நிகழ்ந்தது!"

**போதகர் மார்க் பசாலிவ், நார்த்போர்ட் உலக பரிசுத்த மையம் புளோரிடா, அமெரிக்கா, செப்டம்பர் 12**

இர்மா புயல் கடுமையான தாக்கமுடையதாக இருந்தது. அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஜெபம் இல்லாவிட்டால் என்ன நடைபெற்றிருக்கும் என்பதை என்னால் கற்பனை செய்துகூட பார்க்க முடியவில்லை. பட்டணத்திலிருந்து மக்கள் வேறு பகுதிகளுக்கு வெளியேறியதால் அது ஆள்நடமாட்டமின்றி இருந்தது. கடைகள், எரிவாயு நிலையங்கள், வால்மார்ட் மற்றும் மெக்டொனால்ட் போன்ற அனைத்தும்கூட மூடப்பட்டன.

செப்டம்பர் 10 ஞாயிற்றுக்கிழமை அன்று காலையில், இர்மா புயலானது உலக பரிசுத்த மையம் அமைந்துள்ள நார்த்போர்ட் வழியாக கடந்துச் செல்லும் என அறிவிக்கப்பட்டது. ஆனால் அறிவர். லீ அவர்கள் எங்களுக்காக ஜெபித்ததால், கர்த்தர் எங்களை காத்துக்கொள்வார் என்று நாங்கள் நம்பினோம்; அதனால் நாங்கள் காலிசெய்துவிட்டு போகாமல், அந்த மையத்திலேயே தங்கினோம்.

அநேக மக்கள் எங்களிடம் வெளியேறிவிடும்படி சொன்னபொழுதிலும், நாங்கள் எவ்வித சந்தேகமுமின்றி அவருடைய ஜெபத்தின் வல்லமையை விசுவாசித்தோம். நாங்கள் ஒரு அற்புதம் நிகழும் என்று உறுதியாக இருந்தோம். மின்சாரம் துண்டிக்கப்பட்டு, இணையவசதியும் இல்லாமல் போனது. அலைபேசி மட்டுமே தொடர்பு கொள்வதற்கான சாதனமாக இருந்தது. முடிவாக, அற்புதம் நிகழ்ந்தது. நாபில்ஸ், புளோரிடா வழியாக கடக்கும் என்று சொல்லப்பட்ட இர்மா புயல் திடீரென்று அதன் திசையிலிருந்து மாறிச் சென்று, வேகமாக மடிந்துப்போனது. அல்லேலூயா!

இர்மா புயல் மடிந்துபோகாமல் தொடர்ந்து வானிலையில் அறிவிக்கப்பட்ட திசையிலேயே வந்திருக்குமானால், எங்களது உலக பரிசுத்த மையமானது பெரிய பாதிப்பை தவிர்த்திருக்க முடியாது. அறிவர். லீ அவர்கள் ஜெபித்த பிறகு தேவன் கிரியை செய்தார்; அவருடைய ஜெபத்தை தவிர்த்து, இந்த அற்புதத்தை விளக்க வேறு எவ்வித சாத்தியமான விளக்கங்களும் கிடையாது.




## "அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஜெபம் அநேக நகரங்களையும், சபைகளையும் காப்பாற்றியது!"

**போதகர் விட்டாலி ஃபிஷ்பர்க், தேவனுடைய வல்லமை ஞானம் மான்மின் சபை நியூயார்க், அமெரிக்கா, செப்டம்பர் 13**



செப்டம்பர் 4 அன்று அதிகாலை வேளையில், சில போதகர்கள் என்னை தொடர்பு கொண்டு, "ஒரு அதிபயங்கரமான பெரிய புயல் புளோரிடாவை நோக்கி வந்துகொண்டிருக்கிறது, நியூயார்க் வழியாக கடந்துச் செல்லும் எனவும் முன்னறிவிக்கப்பட்டுள்ளது" என்று கூறினார்கள். உயர்ந்த அழிவின் வகையைச் சேர்ந்த இர்மா புயல் போதகர்களை பெரிய அச்சத்திற்குள்ளாக்கியது.

செப்டம்பர் 6 அன்று, நியூயார்க்கில் உள்ள ரஷிய மொழி பேசும் போதகர்களின் வேண்டுகோளுக்கிணங்க அறிவர். ஜேராக் லீ அவர்கள் ஜெபிக்கும்படி நான் கேட்டுக் கொண்டேன். அதன்பிறகு, நானும் என் மனைவி ஒலிஸியாவும் சமாதானத்தை உணர முடிந்தது, ஏனென்றால் எந்தப் புயலும் மேய்ப்பரின் வல்லமைக்கு முன்பதாக நிற்க முடியாது என்பதை நாங்கள் விசுவாசித்தோம்.

ஞாயிற்றுக்கிழமை காலையில் இர்மா புயல் புளோரிடாவில் தரையிரங்கும் என்று முன்னறிவிக்கப்பட்டிருந்தது. அதனால் என்னுடைய பகுதியிலிருந்த மக்கள் உணவை செவ்வாய்கிழமை மாலையிலிருந்து புதன்கிழமை காலைவரை ஆயத்தம் செய்வதில் அலுவலாய் இருந்தனர்; எரிவாயு நிலையத்திலும் நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்தனர். அவர்கள் அச்சத்தினால் வீடுகளை காலிசெய்தனர். எப்படியிருந்தாலும், கரீபியன் தீவுகளில் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்திய இர்மா புயல், புளோரிடாவின் மேற்குப் பகுதிக்கு திசைமாறி சென்றது. அமெரிக்காவின் கிழக்குப் பகுதிகளில் முன்னமே அறிவிக்கப்பட்ட அளவிற்கு பாதிப்புகளை ஏற்படுத்தாமல் அது மடிந்துப்போனது. அல்லேலூயா!

டெக்சாஸ் மற்றும் புளோரிடாவில் அநேக பிரபல்யமான போதகர்கள் இருந்தபோதிலும், வேறு எந்த போதகர்களால் அல்ல, தலைமை போதகர் அவர்களின் ஜெபத்தினாலேயே அநேக சபைகளும் நகரங்களும் காப்பாற்றப்பட்டது.



## "புளோரிடாவில் உள்ள விசுவாசிகளும் அவர்கள் குடும்பங்களும் பாதுகாக்கப்பட்டன!"

**போதகர் ஜேம்ஸ் ஷிம், நியூயார்க் சர்வதேச மான்மின் சபை, நியூயார்க், அமெரிக்கா, செப்டம்பர் 12**

செப்டம்பர் 4 அன்று, என்னுடைய சபையை சார்ந்த கண்காணியாள் டோனோவான் பின்னோக் அவர்களிடமிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அவளுடைய உறவினர்கள் புளோரிடாவில் வசித்து வருகிறார்கள். புளோரிடாவை நோக்கி இர்மா புயல் வருவதாகவும், அது ஆகஸ்டு மாதத்தில் ஹாஸ்டன், டெக்சாஸ் மாகாணங்களை தாக்கிய ஹார்வி புயலைக் காட்டிலும் அதிக சக்திவாய்ந்த புயலாக இருப்பதாவும் அறிவித்தாள். அவள், தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களிடம் ஒரு ஜெப விண்ணப்பத்தை அனுப்பும்படி என்னிடம் கேட்டுக்கொண்டாள். செப்டம்பர் 6 அன்று, நான் புளோரிடாவில் இருக்கும் விசுவாசிகளுக்காக மான்மின் தலைமை சபைக்கு ஜெப விண்ணப்பத்தை அனுப்பினேன்.

அநேக செய்தி ஊடகங்கள் இர்மா 5ம் எண் புயலாக உருவாகி வந்துகொண்டிருப்பதாகவும், கரீபியன் தீவுகளை மணிக்கு 250 கி.மீ வேகத்தில் பலத்த காற்றுடன் வந்து தாக்கும் எனவும் அறிவித்தன. புளோரிடா அரசாங்கம் 6.5 மில்லியன் புளோரிடா மக்களை எச்சரித்து, அவ்விடத்திலிருந்து வெளியேறிவிடும்படி கண்டிப்பான ஆணையை இட்டது. மக்கள் கடை அலைமாரிகளை காலிசெய்தனர்; சாலைகளில் முடிவில்லாத ஜனக்கூட்டத்தின் வரிசைகளால் போக்குவரத்து நெரிசல் உண்டானது.

அறிவர். லீ அவர்கள் ஜெபித்த பிற்பாடு, புளோரிடா மாகாணத்தின் கிழக்கு கடற்கரையை கடந்துச் செல்லும் என்று சொல்லப்பட்ட முன் கணிப்புகளுக்கு மாறாக இர்மா புயலின் பாதையானது புளோரிடாவின் மையப்பகுதி வழியாக நிலப்பகுதியை கடந்து திசைமாறிச் சென்றது. அதன்பிறகு, இர்மா புளோரிடாவின் மேற்கே போகும் என்று சொல்லப்பட்டது. எப்படியிருந்தாலும், புயல் கியூபாவை கடந்து வந்த பிறகு, அது திடீரென்று வலுவிழந்து, புளோரிடாவில் 2ம் எண் புயலாக தரையை கடந்தது. அது தொடர்ச்சியாக 1ம் எண் புயலாக வலுவிழந்து, ஒரு சாதாரண வெப்ப மண்டல புயலாக மாறியது. அதன் பாதிப்பும் எதிர்பார்த்ததைவிட மிகவும் குறைவாகவே இருந்தது.

என் சபை விசுவாசியின் உறவினர் சகோதரி வெலன்டினா கொலோவினா புளோரிடாவின் நார்த்போர்ட் பகுதியின் மேற்குப் பகுதியில் வசித்து வருகிறாள். அவள் தன் வீட்டைச் சுற்றிலும் ஒரு சிறு மரம்கூட சேதமடையவில்லை என்று சொன்னாள். அவள் மகிழ்ச்சியோடு, "இர்மா புயல் பட்டணம் முழுவதையும் கடந்துச் சென்றுவிட்டது, இப்பொழுது சுத்தமாக, காய்ந்துபோய் காணப்படுகிறது" என்று கூறினாள்.

## "அறிவர். ஜேராக் லீ அவர்களின் ஜெபத்தினால் நாங்கள் பாதுகாக்கப்பட்டோம்!"

**மியாமி, புளோரிடாவிலுள்ள லூயிஸ், ஜெஸிகா, ஜெனிசஸ் எஸ்டெலாவின் குடும்பங்கள், செப்டம்பர் 14**



செப்டம்பர் 6 அன்று, நாங்கள் வசித்துக் கொண்டிருக்கிற புளோரிடாவின் மியாமி–டாடே கவுண்டியிலுள்ள ஹயாலே என்ற பகுதியை நோக்கி வடகிழக்காக இர்மா புயல் வந்து கொண்டிருந்தது.

அந்தப் புயல் ஏற்கனவே கரீபியன் தீவுகளை நாசம் செய்திருந்தது; அநேக மரணங்களை ஏற்படுத்தி, மிகப் பெரிய பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. அது புளோரிடாவின் மையம் மற்றும் கிழக்கு கடற்கரையை நோக்கி பலத்த மழை மற்றும் காற்றுடன் மணிக்கு 105 கி.மீ வேகத்தில் வடபுறத்தில் நகர்ந்து கொண்டிருந்தது. நாங்கள் மியாமியின் வடகிழக்குப் பகுதியில் வசித்துக் கொண்டிருக்கிறோம்; அது புளோரிடாவிலேயே மிகுந்த மக்கள் தொகை நிறைந்த நகரம்.

வானிலை அறிக்கையில் அந்தப் புயல் மிகுந்த பேரழிவை ஏற்படுத்தும் என்று அறிவித்திருந்தார்கள். எனவே நாங்கள் அறிவர். ஜேராக் லீ அவர்களிடம் எங்கள் ஜெப விண்ணப்பத்தை அனுப்பினோம். தலைமை போதகரின் ஜெபத்திற்குப் பிற்பாடு, நேரடியாக மியாமி–டாடே கவுண்டியை தாக்கும் என்று சொல்லப்பட்டு வந்த புயல் திசைமாறிப்போனது. அமெரிக்காவின் கிழக்குப் பகுதிக்கு பதிலாக புளோரிடாவின் மேற்கு கரையோரப் பகுதிக்கு புயல் திசைமாறி போய்விட்டது என்ற செய்தியை வானிலை அறிக்கையில் கேள்விப்பட்ட பிறகு நாங்கள் வெளியேறாமல் வீட்டிலேயே இருந்துவிட்டோம்.

செப்டம்பர் 9 அன்று இரவில், மியாமி–டாடே கவுண்டி இர்மாவின் நேரடி தாக்குதலின் அபாயத்திலிருந்து மீண்டுவிட்டது என்று அறிவிக்கப்பட்டது. அல்லேலூயா!

GCN
Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS
Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN
World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com